## செய்தி வெளியீடு எண்: 063 நாள்: 24.01.2020

## செய்தி வெளியீடு

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள**

**திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வழி**

**திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது**

உலகப் பொதுமறையாம் திருக்குறள் மனித வாழ்வின் மாட்சிமைக்கு ஆளுமைப் பண்புகளையும் மேலாண்மை நுட்பங்களையும் அறநெறிக் கருத்துக்களையும் உலக மக்களுக்கு குறிப்பாக இளைஞர்கள் கண்டு கேட்டு உணர்வதற்காக மாண்புமிகு மேனாள் முதமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டது திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடமாகும்.

இக்காட்சிக்கூடத்தில் திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு ஓவியம் வீதம் மொத்தம் 133 ஓவியங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குறள் தொடர்பான ஓலைச் சுவடிகள், அரிய நூல்கள், சிலைகள், நிழற்படங்கள் ஆகியன சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 2019–20ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது

''உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வழி ஆண்டுதோறும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டில் திருக்குறள் நெறிப்படி சிறந்த ஓவியம் படைப்பவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்''

மேற்சுட்டிய அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தின் வாயிலாக திருக்குறள் மற்றும் திருக்குறள் கூறும் பொருள் தொடர்பான ஓவியங்களை தமிழ்நாடு முழுவதிலுமுள்ள படைப்பாளிகளிடமிருந்து பெற்று நடுவர் குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு சிறந்த 15 படைப்புகளுக்கு இதற்கென நடத்தப்பெறவுள்ள விழாவில் பரிசுகள் வழங்கப்படவுள்ளது. படைப்பொன்றுக்கு ரூ. 40,000/– பரிசுத் தொகையாக வழங்கப்பெறும்.

**விதிமுறைகள்**

- ஓவியங்கள் திருக்குறள் மற்றும் திருக்குறள் கூறும் பொருள் தொடர்பில் இருத்தல் வேண்டும்
- ஓவியங்கள் 3 அடி ஜ் 2 அடி அளவுள்ளதாக இருத்தல் வேண்டும்.
- தரமான ஓவிய கித்தான் துணியில் (Canvas Cloth) வரையப்பட வேண்டும்.
- ஓவியம் தரமான அக்ராலிக் (Acrylic Paint) வண்ணக் கலவையில் தீட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- தீட்டப்படும் ஓவியங்கள் நிறுவனத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் 10.02.2020 – திங்கட்கிழமை மாலை 5.30 மணி.

- நடுவர்களின் முடிவே இறுதியானது.
- தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கான பரிசுகள் 24.02.2020 – திங்கட்கிழமை அன்று வழங்கப்படும்.
- வெற்றி பெறுபவர்கள் விழாவிற்கு வருகைதர பயணப்படி, நாட்படி போன்றவை வழங்கப்படமாட்டாது.

மேலும் விவரங்களுக்கு இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113, தொலைபேசி – 044–22542992, மின்னஞ்சல் – iitstaramani@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**